905

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—7 குருகுலம், மாம்பாக்கம்; செய. ஐப்பசி, உ௰ 5—11—54 தளிர்-5

கர்னாடகத் தமிழ் இசை

'இனிமையான இசை அமைப்போடு கூடிய தமிழில் உயர்தரமான கீர்த்தனங்கள் குறைவாக இருப்பதாக கூறுவது பாஷையையே அவமதிப்பதாகும். தூய கர்னாடக சங்கீதம் என்பது ஒரு பாஷைக்கு மட்டும் சொந்தமானதன்று. தமிழ் இசையின் மதிப்பு குறைவதற்கு நாம் அலட்சியமாக இருந்ததே காரணமாகும். மக்களுக்கு மீண்டும் அதில் சிரத்தை யூட்டி அதற்கும் புத்துயிரூட்டி நுணுக்கமான ஆராய்ச்சியும், ஆக்கமான முயற்சியும் தேவை. இதில் அகில இந்திய ரேடியோ பேருதவி புரிய முடியும். நல்ல தமிழ் இசையை பிராபில்யப்படுத்தி வளர்க்க அதன் சென்னை, திருச்சி நிலையத்தார் இன்னும் அதிக கவனம் செலுத்தினால் கர்னாடக சங்கீதத்துக்கும், தமிழுக்கும் மகத்தான சேவை புரிந்தவர்களாவார்கள்.'

'சங்கீதத்தை கற்றுக்கொள்ள நம்மில் பெரும்பாலோருக்கு சந்தர்ப்பம் கிடைக்காமலிருந்தாலும் அதைக் கேட்டு அனுபவிக்கும் வாய்ப்பை ரேடியோ நமக்கு அளித்துள்ளது. தற்போதைய சூழ்நிலையில் சங்கீதமாகட்டும், வேறு எந்த நுண்கலையாகட்டும் வளர்ந்தோங்க வேண்டுமானால் அதற்கு மக்களிடையே வேரோட வேண்டும். முக்கியமாக தரத்தை குறைக்கக் கூடாது. மேலும் கலா ரூபங்களை கெடுக்கவோ ஆபாசப் படுத்தவோ கூடாது. ஆனால், அதற்காக ஒரு சிலரின் ஏகபோக பொக்கிஷமாக சங்கீதத்தை ஆக்கி விட்டுவிடக் கூடாது. வித்வானின் சங்கீத மேதையை பொது ஜனங்கள் புரிந்துகொள்ளக் கூடியவாறு கச்சேரி அமைய வேண்டும். பாடகர், அவரைக் கேட்பவர் இருவரையும் மெய்மறக்கச் செய்து ஒன்று படுத்தக்கூடியதே உண்மை சங்கீதமாகும்.'

—நிதி மந்திரி ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம்.

'சோர்வுற்று விழுந்துகிடந்த சங்கீத கலையைத் தட்டி யெழுப்பிக் காப்பாற்றிய பெருமை அகில இந்திய ரேடியோவைச் சேர்ந்ததாகும். ரேடியோ நிலையத்தார் தக்க சமயத்தில் தலையிட்டிராதிருந்தால் வட இந்தியாவில் சங்கீத கலை செத்திருக்கும். தெற்கிலும், வட இந்தியாவைப்போல் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லா விட்டாலும் சங்கீத கலையை மேலும் வளர்த்து அதன் மேன்மையை மக்கள் புரிந்துகொள்ளச் செய்திருக்கிறார்கள். கட்டுக்கடங்காது மணிக்கணக்காகப் பாடிக்கொண்டிருந்த நம் சங்கீத வித்வான்களையெல்லாம் குறித்தகால கெடுவுக்குள் பாடி முடிக்கச் செய்து அதில் ஓர் ஒழுக்கத்தை உண்டாக்கிய ரேடியோ நிர்வாகத்தினர்களை வாழ்த்தவேண்டும்.'

சங்கீதம் பயிலுவதை அவமானமாக கருதிய காலமும் உண்டு. அதையெல்லாம் பொருட்படுத்தாமல் சங்கீத கலையை இன்றுவரை போற்றிப் பாதுகாத்து வந்துள்ள மாதர் சமூகத்துக்கு நன்றி செலுத்தவேண்டும். இந்திய சங்கீதத்தைக் கேட்பதுடன் பாடகரின் முக பாவங்களையும் பார்க்கவேண்டுமென்பதே என் கருத்து. ஆகவே நாம் எட்டியிருந்தாலும் அவ்வாறு தெரியக்கூடிய டெலிவிஷன் கருவி நம் நாட்டுக்கு வரும் காலத்தையும் நான் ஆவலுடன் எதிர்ப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இத்தகைய விழாவின் மூலம் சங்கீதத்தின் பெருமையும், ரேடியோவின் அருமையும் நாடு முழுவதும் குக்கிராமங்களில் குடிசைகளில் வாழும் மக்களும் புரிந்துகொள்ளக் கூடியவாறு பரவவேண்டும்.

—சென்னைக் கவர்னர் ஸ்ரீ. ஸ்ரீ. பிரகாசா.

ஆசிரியர்க்குக் கடிதம்

பேரன்புகொண்டு
பெருந் தொண்டாற்றிவரும்
பெருந் தவத்திரே!

வணக்கம்!

எளியநடையில் இதயம் வரை பதியும் தங்களுடைய இனிமையான பிரசங்கத்தை திருமந்திர மாநாட்டில் எங்கள் ஸ்தலத்தில் கேட்டு மகிழ்ந்தேன். அம் மகாநாட்டில் மாம்பாக்கம் குருகுலம் பற்றிய அறிக்கை ஒன்றையும் பார்த்தேன்.

உண்மைக்கு ஊர் முழக்கு வேண்டாவகையால், அந்த ஒரு அறிக்கையிலேயே தங்களுடைய தொண்டும், பெருமுயற்சியும், போராற்றலும் விளங்கின.

நேற்று குருகுல அன்பர் ஒருவர் வாயிலாக இன்னும் இதர அறிக்கைகளையும், நடுநாட்டுத் திருப்பயணக் குறிப்புக்களையும் பெற்றுப் படித்து ஆனந்தமீதூர இக்கடிதத்தைத் தங்களுக்கு எழுதுகின்றேன்.

"உபநிஷதங்களின் மொழிகளும், எண்ணங்களும், வாள் போலவும் சம்மட்டி போலவும் மோதக விழுகின்றன. ஆங்கு மூளையைக் கலக்கின்றன வீண் வார்த்தைகள் இல்லை. ஒவ்வொரு சரமும் உறுதியாக முழுக் கருத்தோடு நிற்கிறது" என்று விவேகாநந்தர் கூறிய பாராட்டையே தங்கள் பிரசங்கத்துக்கும் ஒப்புமை காட்டலாம்.

தங்களுடைய பெருமுயற்சி இப்போது விசுவரூபம் கொள்ளாவிட்டாலும் ஒருகாலத்தில் விசுவரூபம் கொள்ளலாம். ஏனெனில், "மனித எண்ணம் வீண் போகாது என்றும், ஒருவன் ஒரு எண்ணத்தை எண்ணிவிட்டு குகைக்குள்ளேயே மரித்தாலும் குகைச்சுவரைக் கிழித்துக் கொண்டு ஆகாயத்தில் நிற்கும் என்றும், தக்கார் ஒருவர் தோன்ற அவருள் புகுந்து தனது சிந்தனையைப் பூர்த்தி செய்து கொள்ளும் என்றும், விவேகாநந்தர் முழக்கியுள்ளார்.

இதற்கு உதாரணமாக, விவேகாநந்தர் புத்தரை எடுத்துக் காட்டுகிறார். விவேகாநந்தர் கூறுவது வருமாறு:—

"புத்தர் தன்னை இருபத்தைந்தாவது புத்தர் என்று கூறியுள்ளார். அவருக்கு முன்னால் இருந்த இருபத்துநான்கு புத்தர்களை உலகம் அறியவில்லை. அந்த இருபத்துநால்வர் அஸ்திவாரத்தில் கௌதமர் தன் கொள்கையை நிலைநாட்டினார்"

புத்தர் பலர் தோன்றுவார்கள் என்பதற்கு, மணிமேகலையில், "புத்த ஞாயிறு தோன்றுங்காலை" என்று வரும் அடிகள் ஓர் சான்றாகும்.

தங்களுடைய கொள்கைகள், நோக்கங்கள் முதலியன திட்ட அளவில் கிடைத்து ஓரளவு செயல்படத் துவங்கி விட்டன. திட்டத்தின் நோக்கங்கள் தூய்மையாயிருப்பின் புறவுலகுக்கு மிகவும் விகசித்துத் தோன்றாவிட்டாலும் அழிந்துபடாது என்றும் நிலைத்திருக்கும். இதற்குச்சான்று, பூசலார் நாயனாரின், 'சிந்தையின் செம்மையினின்றும் எழும்பிய கோயிலையே முதன்மையாகச் சிவபெருமான் அங்கீகரித்தார். பூசலார் கட்டிய கோயில் புறவுலகில் இல்லாவிட்டாலும், திருநின்றவூர் ஆலயத்துள் வீற்றிருக்கும் இறைவன் திருநாமம் "ஹிருதபாலயே சுரராம்".

"எம்மானை என் மனமே கோயிலாக இருந்தானை" என்றும் 'நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்" என்றும் அப்பரும் கூறியுள்ளார் அன்றோ?

தங்களுடைய சீரிய முயற்சிக்கும், விழுப்பம் மிக்க தொண்டிற்கும், பெரும் பக்க பலம் வேண்டும். இருந்தாலும், தாங்களும், தங்கள் தொண்டர்களும்,

"அருமை யுடைத் தென்று
அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்"

என்றும்,

"ஊழையும் உப்பக்கம்
காண்பர் உலைவின்றித்
தாழாது உஞற்றுபவர்"

என்றும், வாய்மலர்ந்த "பொய்யில்புலவர்" அமுதமொழியை அறிவீர்களானபடியால், தாங்களும், தங்கள் தொண்டர்களும் உழைத்துவர, "உழைப்பில் வாரா உறுதிகள் உளவோ" என்ற தவராஜசிங்கமான பட்டினத்து அடிகள் வாக்கு தங்களுக்கும் தங்கள் தொண்டர் திறத்தும் பலித்து அதன் மூலம், தங்கள் "செம்மை நலங்" திகழ்ந்த சிந்தையினின்றும் முகிழ்த்த சிறந்த முயற்சிகள் சித்தியுற,

"சென்று சென்று தொழுமின்
தேவர் பிரானிடம்
கன்றி னோடு பிடி சூழ்தண்
கழுக் குன்றமே"

(ஆளுடைய நம்பி)

தி. போ. ஸ்ரீநிவாஸையர்,
திருவாவடுதுறை.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros,

GENERAL HARDWARE
MERCHANTS
AVANASHI ROAD,
COIMBATORE.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம் மதுராந்தகம் (தஞ்)

அதற்கு அநேக வருஷங்கள் கழித்துத்தான் நல்ல கிராக்கி ஏற்படும். உதாரணமாக, கெப்ளர் என்ற ஜெர்மன் வான சாஸ்திரி, (1571-1630) கிரகங்களின் கதியை நிர்ணயித்து ஒரு நூலெழுதினார். அது இப்பொழுதைக்கும் ஆதார பூர்வமான ஒரு நூலாக விளங்குகிறது. ஆனால் அவர்காலத்தில் இதற்குக் கிராக்கியே இல்லாமலிருந்தது. ‘என்னுடைய நூலைப் படிக்கக் கூடிய ஒரு வாசகரைக் காண நான் இன்னும் நூறு வருஷம் காத்திருக்க வேண்டும்’ என்று அவரே கூறினதாகச் சொல்லப் படுகிறது.

எந்தப்புத்தகம் எல்லோர் மத்தியிலும் பரவியிருக்கின்றதோ அதனை நல்ல புத்தகம் என்று சொல்ல வேண்டும். குறிப்பிட்ட ஒருதுறையில் மட்டும் புலமை பெற்றிருக்கிறவர்களால், குறிப்பிட்ட ஒரு துறையைப்பற்றி மட்டும், அந்தத் துறையிலுள்ளவர்களுக்கு மட்டும் பயன் படக் கூடிய வண்ணம் எழுதப்பெறுகின்ற புத்தகங்களை எல்லோரும் விரும்பிப் படிக்க முடியாதல்லவா? அதனால் எல்லோருக்கும் பயனுமில்லையே மற்றப் புத்தங்களில் காணப்பெறும் விஷயங்களையே திருப்பிச் சொல்லும் புத்தகங்கள் நீடித்து வாழ மாட்டா. எல்லோருக்கும் புரிகின்ற முறையில் புதிய புதிய விஷயங்களைச் சொல்கின்ற புத்தகங்கள் தான் நல்ல புத்தகங்கள்.

எந்தக் காலத்திலும் படித்துப் பயன் பெறக்கூடிய புத்தகம் தான் நல்ல புத்தகம். அதாவது எப்பொழுது படித்தாலும் அதில் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்கள் புத்தம் புதியன போலவும் அறிவுக்கும் உள்ளத்திற்கும் உணவாகவும் இருக்கின்றனவோ அவை தான் நல்ல புத்தகங்கள். உதாரணமாக, கார்ல் மார்க்ஸின் காபிடல், பேக்கனுடைய கட்டுரைகள் முதலியவைகளைச் சொல்லலாம்.

சுலபமாகப்படிக்கக்கூடிய புத்தகந்தான் நல்ல புத்தகம். எந்த ஆசிரியர், தன் புலமையைக் கருதாமல் வாசகர்களுக்குப் பயன்பட வேண்டும், அவர்களுடைய அறிவைத் துலக்க வேண்டுமென்று எழுதுகிறாரோ அந்தப் புத்தகந்தான் சுலபமாகப் படிக்கக் கூடிய வண்ணம் அமையும்.

ஒரு நூலாசிரியன் சொல்லுகின்ற கருத்துக்களை வாசகர்கள் அங்கீகரிக்கலாம், அல்லது நிராகரிக்கலாம் அது வேறு விஷயம். ஆனால் அந்த நூலாசிரியன் சொல்லுகின்ற கருத்துக்களோ, அவற்றைச் சொல்லுகின்ற முறையோ வாசகரைச் சிந்திக்கச் செய்யவேண்டும் வாசகருக்கு அதுகாறும் புரியாதிருந்த அநேக பிரச்சனைகளுக்கு அவை பரிகாரந்தருவனவாயிருக்க வேண்டும்; மானிட ஜாதியின் மொத்த அறிவை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும். இப்படிப் பட்டவையே நல்ல புத்தகங்கள்.

மானிட வாழ்க்கையில் எத்தனையோ பிரச்சினைகள் எத்தனையோ நூற்றாண்டுகளுக்குப் பிறகு இன்னமும் தீர்க்கப் படாத பிரச்சினைகளாகவே இருக்கின்றன. இந்தமாதிரியான பிரச்சினைகளைப் பற்றி விவரிக்கின்ற நூல்களையும் நல்ல நூல்களென்று சொல்ல வேண்டும். பேரறிஞர்யுள்ளவர்கள், இந்த மாதிரியான பிரச்சினைகளை அலட்சியமாக ஒதுக்கித் தள்ளிவிட மாட்டார்ககள். அவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்யவே முற்படுவார்கள்; தங்கள் ஆராய்ச்சியை வெளிப்படுத்தவும் துணிவார்கள்.

நல்ல புத்தகங்களை அவற்றின் மூலத்திலேயே படிக்க வேண்டும் அவைகளைப்பற்றிய புத்தகங்களை, அதாவது அவற்றில் கூறப்பட்டிருப்பதை வடிக்கட்டிக் கொடுக்கிற புத்தகங்களைப் படிப்பது இரண்டாம் பட்சந்தான்.

—பாரதி.

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்

சிறந்தது எங்கள் எலிபெண்ட் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

நல்ல நூல் எது?

ஒரு நல்ல நூலை குறைந்த பட்சம் மூன்று தடவையாவது படிக்க வேண்டும். அப்படிப் படித்த பின்னர்தான், நூலாசிரியருக்கும் வாசகருக்கும் ஒரு விததொடர்பு உண்டாகிறது. மூன்றாவது தடவை படித்து முடித்த பின்னர்தான், ஆசிரியர் கூறும் கருத்துக்களோடு தம் கருத்துக்களை ஒப்பிட்டுப்பார்த்துக்கொள்வது வாசகருக்குச் சாத்தியமாகிறது.

பொதுவாகவே, ஒரு நூலை எப்படிப் படிக்க வேண்டுமென்பதற்குச் சில நியதிகள் உண்டு. இந்த நியதிகளை, நல்ல நூல்களைப் படிப்பதில் சிரத்தை காட்டும் பிரதியொரு வாசகரும் ஓரளவேனும் தெரிந்து கொள்வது நல்லது. அப்பொழுதுதான், படித்தலின் பயன்களைப் பெற முடியும்.

ஆனால் ஒரு நல்ல நூலை எப்படிப்படிப்பது என்பதைப்பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன்னர், நல்ல நூல் எது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். எப்படி, பத்து புத்தகங்களை மேற் போக்காகப்படித்து விட்டு 'நான் பத்து புத்தகங்களைப் படித்து முடித்து விட்டேன்' என்று பெருமையோடு சொல்லிக்கொள்வதைக் காட்டிலும் ஆழ்ந்து படித்து அனுபவிப்பது மேலானதோ அப்படிப்போல், நூறு புத்தகங்களை வாங்கிப் படித்து நமது அருமையான பொழுதையும் பணத்தையும் வீணடிக்காமல் நல்ல புத்தகமாக ஒன்றைத் தெரிந்தெடுத்து அதை நன்றாகப் படித்து, படித்ததைக் கூடிய மட்டில் நமது வாழ்க்கையில் கொண்டுவரப் பார்ப்பதுதான் சிறந்தது. ஆகவே, நல்ல நூல் எது, அதன் லட்சணம் என்ன என்பவைகளைப் பற்றி அறிந்துகொள்வது அவசியமாகும்.

சாதாரணமாக, உலகத்திலே மிகச் சிறந்த புத்தகங்கள் மொத்தம் நூறு என்று கணக்கிட்டுச் சொல்வது வழக்கம். ஆனால் நூறு என்பது திட்டமான ஒரு கணக்கல்ல நூற்றுக்கு மேற்பட்ட நல்ல புத்தகங்கள் இருக்கின்றன.

ஒருவன், மிகச் சிறந்தனவாகக் கருதப்படும் எல்லா நூல்களையும் படித்தால் நல்லதுதான். ஆனால் அது சாத்தியமில்லை. அதனை ஒரு லட்சியமாக மட்டுமே வைத்துக் கொள்ளலாம். படிக்கிற நூல்கள் எண்ணிக்கையில் குறைவாயிருந்தபோதிலும் அவற்றைப் பக்தி சிரத்தையோடு படிக்கவேண்டும். அதுதான் முக்கியம்.

சிலர், சில புத்தகங்களைத் தாங்கள் படிக்க மாட்டார்கள்; ஆனால் மற்றவர்களுக்கு அவசியம் படிக்கவேண்டிய புத்தகம் என்று சிபார்சு செய்வார்கள். இன்னும் சிலர், 'இன்ன புத்தகம் நல்ல புத்தகம் என்று சொல்கிறார்கள்; அதை நான் அவசியம் படிக்கவேண்டும்' என்று சொல்வார்கள்; ஆனால் அதைப் படிக்கவே மாட்டார்கள். இப்படிப்பட்ட புத்தகங்களை நல்ல புத்தகங்களென்று சொல்லலாம். என்று வேடிக்கையாகச் சொல்வதுண்டு. இது ஓரளவு சரியென்றாலும் இதுவே முழு உண்மையல்ல.

உண்மையில், அதிகமாகப் படிக்கப்படுகிற புத்தகம்தான் நல்ல புத்தகம் என்று சொல்ல வேண்டும். எவை எப்பொழுதும் ஒரே மாதிரியாக விற்பனையாகிக்கொண்டிருக்கின்றனவோ அவையே நல்ல புத்தகங்களென்று சொல்லலாம். ஆனால் இப்படிப்பட்ட புத்தகங்கள் முதல் ஓரிரண்டு வருஷ காலம் அதிகப்படியாக விற்பனையாகமாட்டா. அதன் அருமை பெருமைகள் பரவப் பரவத்தான் அதனுடைய விற்பனையும் அதிகமாகும். ஹோமருடைய இலியத் என்ற மகா காவியமானது, சென்ற மூவாயிர வருஷ காலத்தில் குறைந்த பட்சம் இரண்டரை கோடி பிரதிகளாவது விற்பனையாகி இருக்கும் என்று சமீபத்தில் ஓர் அறிஞர் கணக்கிட்டுக் கூறினார். இந்த மகா காவியத்தை, உலகத்து எத்தனை மொழிகளில் மொழிபெயர்த்திருக்கின்றனர், எத்தனை வருஷங்களாக இது சிரத்தையோடு படிக்கப்பட்டு வருகிறது என்பவைகளை உத்தேசிக்கையில், இந்த இரண்டரை கோடி என்பது மிகைபடச் சொன்னதாகாது.

ஒரு புத்தகத்தை அதிகமான பேர் படிக்கிறார்களென்பதற்காகவே அது நல்ல புத்தகமாகிவிடாது. சில நாவல்கள் இருக்கின்றன. லட்சக் கணக்கில் விற்கின்றன. இது காரணமாக அவற்றைச் சிறந்த இலக்கியங்கள் என்று சொல்லிவிட முடியுமா? முடியவே முடியாது தவிர, ஒரு நல்ல புத்தகமானது, அது பிரசுரிக்கப்பட்ட காலத்திலேயே அதிகப்படியாக விற்றுவிடுமென்று சொல்ல முடியாது.

அன்பால் அருளால் செயலாற்றப் பழக வேண்டும். அருள் வலி பெற்றவர்கள் ஒரு சொல் சொன்னால் எதுவும் நடக்கும். ஒரு நூலைப் படிக்கிறோம், அப்போது நம் உணர்வால் நூலாசிரியரது உணர்வை அறிகிறோம். அப்போது கண் காது கை முதலியன கூட வேலை செய்கின்றன. ஆயினும் உணர்வு வேலையே சிறப்பாக நடக்கிறது. அது போல பழக்கம் காரணமாகக் கருவி காணங்களைக் கொண்டு தொழில், ஆட்சி, எல்லாம் செய்யலாம். உணர்வு மட்டும் மெய்யுணர்வில் படிந்து நிற்குமாறு பழகவேண்டும். நேர்பட நிற்றல், ஒலிவழியே செல்லல் என்பன இவ்வுணர்வுப் பழக்கத்தையே குறிக்கும் மாணிக்கவாசகர் போன்ற சமயகுரவர்கள் அப்படித்தான் நேர்பட நின்று ஒலிவழியே சென்று, உணர்வு வழியில் ஆண்டவனை வழிபட்டனர். அவர்கள் அருளிய பாடல்கள் 'அற்புதங்களைச்' செய்தன. ஒலி வழியே செய்கை செய்வதுதான் நுட்பமான போராற்றல் நிலை!

திருமுறைகளின் திறம்:

திருமுறைப்பாடல்கள் உணர்வால் உணர்வை நுகரும் திறம் வெளிப்பட்ட வெளிப்பாடுகளே. ஆகவே அவைகளிற் பழகுவது ஒலி வழியே செல்லவும் நேர்பட நிற்கவும் உதவியாக இருக்கும். மிக நுட்பமான உணர்வுக் களத்தில் நடைபெறும் அதன் பேறுகளை விவரிப்பது எப்படி? தக்க கண்காட்சி ஒன்றையே நேரில் சென்று பார் என்று தெரிவிக்கிறோம். இதனைப் பழகியன்றோ பார்க்க வேண்டும். திருமுறைகளில் மாணிக்கவாசகர் பாடல் சிறப்பு. திருமுறைகளும் அவரும் அடங்கிய இடம் தில்லை. தில்லை என்பது பரவெளி—ஞானவெளி—அருள் வெளி. அருளாளர்கள் உள்ளத்திலிருந்து எழுந்த திருமுறைகளுக்கு இடம் உணர்வுக்கு உணர்வாகும் அருள் வெளி! அவ் வெளிக்குரிய பாடல்களும் பூதவெளி மன வெளிக்குள்ளடங்கிய மற்றவர் பாடல்களும் ஒன்றாகி விடுமோ?

திருக்குறளும் திருமுறைகளும்:

திருமுறைகளின் உயர்வும் நுட்பமும் தெரிந்து போற்றப்படவேண்டும். திருவள்ளுவர் எல்லாவற்றையும் சொன்னார். பொருளை விரித்தும் அருளைத் தொகுத்தும் சொன்னார். திருமுறைகள் அருளை விரித்தும் பொருளைத் தொகுத்தும் கூறும். அவ்வளவே அவற்றுக்குள்ள வேறுபாடு. உயர் வாழ்க்கைக்குத் திருவள்ளுவர் காட்டும் வழி தவ வழி. அதற்குத் துணையானவை திருமுறைகள்.

எதற்குத் தவம்?:

தவம் என்பது ஓர் உயிர்க்கும் தீங்கு செய்யாமை. நேரும் தீங்குகளைத் தாங்கிக் கொள்ளல். அப்படியானால் பல உயிர்கட்கும் ஆக்கமான பொருளை, நாட்டை, அதன் எல்லைகளை, உரிமைகளை விட்டுவிடலாமா? காட்டிக் கொடுக்கலாமா? தவம்—அடக்கம் என்பது இவைகளில் எல்லாம் கருத்தின்றி இருப்பதல்ல வில்லுக்கு வணக்கம் ஏன்? அதுபோல அடங்கி முறைப்படி ஆற்றலாக இவைகளைக் காக்கவே தவம். அடக்கமாக ஆனால் ஆற்றலாக அதாவது தகுதியாக இருந்தால் உரிமைகள் பறிபோகமாட்டா!

அலெக்ஸாண்டரும் விவேகானந்தரும்:

அலெக்ஸாண்டர் தமிழகத்தை அடிமைகொள்ள முனையவில்லை. விவேகாநந்தர் பேச்சுக்குப் பின்னரும் இந்தியாவிற்குப் பாதிரிகளை அனுப்புவது வீண் என்றனராம் மேலை நாட்டுக் கிறித்துத் தலைவர்கள் இந்நிலைகள் எதனால் வந்தன? தகுதியால் அன்றோ! எவரையும் துன்புறுத்தாதீர்கள், உங்களை நீங்கள் கல்வி, கலை, குடித்தனம், தவம், மெய்யுணர்வுகளால் தகுதிப்படுத்திக் கொள்ளுங்கள். வலுவாக அடங்கி இருங்கள் என்கிறார் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் வழியே காந்திய வழி:

கொல்லாமையில் வாய்மையில் அதாவது உண்மையில் மெய்யுணர்வில் நாட்டம் வேண்டும். இவ்விரண்டும் முறையே முன்னேற்றத்துக்குள்ள தடைகளை இயல்பாக வெல்லவும் முன்னேறவும் உதவும். திருவள்ளுவர் வழி இது. இன்று காந்தியார் பிறந்தநாள். பெரியோர்கள் நாளை அவர்கள் மறைந்த நாளில் கொண்டாடுவதே சிறப்பும் மரபும் ஆகும். இருப்பவர்களுக்குப் பிறந்தநாள் கொண்டாடலாம். மறைந்தவர்களுக்கு மறைந்த நாளே சிறப்பு. அவர்கள் வாழ்க்கையில் படிப்படியே பெற்ற வளர்ச்சிகளை எண்ணிப் பார்க்க அது உதவும். காந்தியார் தம் வாழ்க்கையில் 'அகிம்சை,' 'சத்தியம்' என்று கொண்ட வழியும் இதுவே. இவ்விரு நோக்கமும் கொண்ட வாழ்க்கை இம்மை மறுமை என்னும் இருமைக்கும் ஏற்ற வாழ்க்கை. இதனை, எல்லாத் துறையினர்க்கும் எடுத்துக் காட்டுவதே குருகுல இயக்கம்.

மைக்காக, பார்ப்பவர்கட்கு வேட்கை உண்டாக்கக் கூடாது என்பதற்காக, மறைவாக வைத்து உணவை மூடி உரியவர்கள் தக்கவர்களுக்கு மட்டும் வழங்குவதுபோல; ஆகவே இங்கிருந்தே ஏன் அத்தகைய வாழ்க்கைப் பணிகளை உண்மையான முறைகளை நிகழ்த்தக் கூடாது. அவர் பக்குவம் கண்டு அருளுகிறார்; அதுபோலவே இங்கிருந்தே ஏன் அவரவர் நிலைமை அறிந்து உயர்த்தும் அருட் செயல்களைச் செய்யக் கூடாது?

அம்பலவாணரை ஏத்த வேண்டும்:

அம்பலவாணர் செய்யும் ஐந்தொழிலும் சிறிய அளவில், எந்த வகையிலாவது நம்மிடமும் நடக்கின்றன; நாமும் செய்கின்றோம். இப்படித் தொழில்களின் தன்மை ஐந்து என்பதையும் அவற்றின் பயன்களையும் தெரிந்துகொண்டு எதையும் செய்தால் பயன் மிகுதிதான். அம்பலவாணர் எல்லாம் வல்லவர். அவர் செய்யும் ஐந்தொழில்களுக்குள் எல்லாம் அடங்கிவிடும். அவர் வடிவம் இவ்வைந்தொழிலையும் நினைப்பூட்டிக்கொண்டே இருக்கிறது. அவரை மறந்தவர்கள் வாழ்க்கையில் இவ்வைந்தொழில் தன்மைகளை நினைக்க முடியுமா? இத் தன்மைகளை நினைத்தால் அவரை நினைத்த மாதிரிதான். இவைகளை மறந்தால் நினைவு கூரவே அம்பலவாணர் வடிவம்; ஆகவே அவரை ஏத்தவேண்டும். "எல்லாம் செயல் கூடும்" என்றார் வள்ளலார்.

அருளாற்றல்:

பொருள் ஓர் ஆற்றல். கருவி கரணங்களால் வேலை செய்வதற்கு அது உதவும். கலை அதனினும் உயர்ந்த ஆற்றல். கருவி கரணங்களை விட்டு எளிதாக வேலை செய்ய அது உதவும். அன்பு அதனினும் சிறந்த ஆற்றல். இல்லறத்தில் அவரவரும் வேலை செய்வது அன்பாற்றலால்தான். அருளாற்றல் எல்லாவற்றினும் சிறந்தது அதாவது இயல்பும் இரக்கமுமான நிலை! மெய்மையில் செறிவும் அறிவும் உடையோர்க்கு அது வாய்த்து வருகின்றது.

தவம்:

அருளாற்றலைப் பெறத் தவம் வேண்டும். கொதிக்கிறபோது மூடினால் ஆவியின் ஆற்றல் மிகுதிப் படுகிறது. வேகவேண்டியது விரைவில் வெந்து விடுகிறது. அதுபோல அடக்கமாக இருந்தால் அக ஆற்றல்கள் மிகுதிப் படும்; அதுவே தவம்.

சீலமும் நோன்பும் (ஆசாரமும்—விரதங்களும்) செறிவும் என் அடக்கத்தை உண்டாக்கும். சீலம் உடலுக்கு நல்லது. நோன்பு—உடலுக்கும் உள்ளத்துக்கும் உறுதி தருவது. செறிவு உணர்வுக்கு இணக்கமாவது. இம் மூன்றும் சேர்ந்ததே தவம்.

அடக்க ஒடுக்கம்:

தவம் என்பது அடக்கம்; தவத்தின் பயன் மெய்யுணர்வு. அது ஒடுக்கம் என்றும் சொல்லப்படும். அடக்க ஒடுக்கம், தவஞானம் என்பன வழக்கு. அடக்கம் என்பது புலனடக்கம்—தவம்; சீலமும் நோன்பும் செறிவும். ஒடுக்கம் என்பது மெய்யில் ஒடுங்குவது. மெய்யுணர்வு ஞானம். சீலம் நோன்பு செறிவு தெளிவு என்பனவே முறையே சரியை கிரியை யோக ஞானங்கள்!

வாழ்க்கைப் போராட்டம்:

வாழ்க்கையில் நாம் பல்வேறு வகைகளில் முயல்வது போராடுவது வெறும் பொருளுக்காக மட்டும் அல்ல. ஆனால் அது அடிப்படைத் தேவை ஆதலின் அதற்காக முயலவேண்டியதுதான். முயன்று பெற்ற பொருளைக் கொண்டு மேலே போக வேண்டும் இல்லையேல் பயனில்லை. ஆகவே பொருளியக்கங்கள் போராட்டங்கள் இம்மேல் நோக்கங்களையும் உட்கொண்டு நடக்கவேண்டும். இவ்வகைகளில் நாம் படிப்படியே முன்னேறினால் நம் வாழ்க்கைப் போராட்டமும் படிப்படியே வெற்றி பெற்ற மாதிரிதான்.

வெற்றியும் வரவேற்பும்:

போராட்டத்தில் வெற்றி பெற்றால் வரவேற்புக் கிடைப்பது இயற்கை. மெய்யுணர்வு வரையில் எட்டும் நம் வாழ்க்கை வெற்றிக்கு ஆண்டவனிடமிருந்து நல்ல ஒலி வரவேற்புக் கிடைக்கும். ஆண்டவன் ஐந்தொழில் செய்கிறான். ஆகவே அவன் 'ஆநந்த' நடனம் ஆடுகிறான். அவனைப் போல நாமும் ஐந்தொழில் பற்றி வெற்றி பெற்றால் அவன் நம்மை நடமாடும் அவன் சிலம்போசையால் வரவேற்பான். அவ்வோசை வழியே சென்று அவன் திருக் காட்சியைக் கண்டு கும்பிடலாம் கும்பிட்டு அவன் திருக்குறிப்பின் வழியே நிற்கலாம்.

"திருச்சிலம் போசை
ஒலிவழியே சென்று
நிருத்தனைக் கும்பிடென்று
உந்தீபற
நேர்பட நின்று என்றுஉந்தீபற".

என்பது சாத்திரப் பாட்டு.

ஒலிவழிச் செய்கை:

ஒலிவழியே சென்று செயலாற்ற வேண்டும். உலகத்தில் நாம் பெரும்பாலும் பொருள் வலிவால் செயல் செய்கிறோம். அப்படியே உணர்ந்து கலையால்

அனுமதியின்பேரில் அதை மேற்கொண்டு நீடிக்கலாம்.

ஆசிரியர்களின் சம்பள விகிதங்களின் பொது உயர்வுடன் தொழில் தரத்தை உயர்த்தும் கடமையை அவர்களிடமே விட வேண்டும்.

ஆசிரியர்கள் தொழில் ஆலோசனை போர்டு

ஆசிரியர் தொழில் போதனைப் பள்ளிகளுக்கு ஏராளமான திறமை வாய்ந்த இளைஞர்கள் வரும்படிச் செய்வதில் வெற்றி பெற்றால், கல்வி புனரமைப்புப் பிரச்சினைகளில் அடிப்படையான அம்சத்தை நிறைவேற்றியதாகும் என்று கூறுகிறார்கள். ஒவ்வொரு ராஜ்யத்திலும் ஆசிரியர் தொழிலுக்கு இளைஞர்களைத் திரட்டுவதற்கான ராஜ்ய ஆலோசனைக் கமிட்டியை நிறுவ வேண்டும். இளைஞர்களை ஈர்க்கும் முறைகளையும், வழி வகைகளையும் காண்பது இக் கமிட்டியின் வேலை

பயிற்சி முறை:

ஆசிரியர்கள் போதனை பயிற்சி முறையிலும் அபிவிருத்தி காண வேண்டும். பள்ளிக்கூடங்களின் வெவ்வேறு நிலைகளுக்குரிய வகையில் ஆசிரியர்கள் பயிற்சி இணக்கமாக அமைந்திருக்க வேண்டும். செகண்டரி பள்ளிக்கூடங்களுக்காக பயிற்சி பெற்று வரும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான பயிற்சி முறைகளில் அத்தகைய இணைப்புத் திட்டம் இல்லை. இதற்கு முக்கிய காரணம் ராஜ்ய சர்க்காரின் கல்வி இலாக்காக்களின் கீழ் ஒரு விதமான பயிற்சி முறையும் சர்வ கலா சாலைகளின் கீழ் ஒரு விதமான பயிற்சி முறையும் இருப்பதே காரணமாகும். இவ்விரண்டு பயிற்சி முறைகளையும் இணைக்க சர்க்கார், சர்வ கலா சாலைகள், தனிப்பட்ட ஸ்தாபனங்கள் கூட்டு முயற்சி செய்ய வேண்டும்.

மொழி ஆசிரியர்கள்:

ஹிந்தி ஆசிரியர்கள் பிராந்திய மொழிகள் ஆசிரியர்கள் பயிற்சி முக்கியமான அம்சம் என்று அறிக்கை வலியுறுத்துகிறது. மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களிடம் கேட்கும் பாடங்களின் முழுப் பயனையும் பெற்று, சிறந்த தரத்தை அடையும் வகையில் மொழி ஆசிரியர்களுக்குத் தகுந்த பயிற்சி அளிக்க வேண்டும். ஒவ்வொரு போதனை முறைப் பயிற்சி ஸ்தாபனத்திலும் உயர்தர தேர்ச்சி பெற்ற மொழி ஆசிரியர்களை அமர்த்தி, அவர்களுக்கேற்ற புத்தகங்களையும் போதனைக்குரிய கேட்டல்-காட்டல் கருவி வசதிகளையும் அளிக்க வேண்டும்.

—தி.

வள்ளுவர் வழி

(முன் தொடர்ச்சி)

தவநெறியும் மெய்யுணர்வும்:

தவம் என்ற உடனே பொருள்களை விட்டு விடுதல்—துறவியாகிக் காட்டுக்குப் போய் விடுதல் என்று எண்ணுவது தவறு. பொருளின்பம், பொறி புலன்களுக்கு இன்பம் கலையின்பம் மனவுணர்வுக்கு இன்பம். மனத்திற்கு மேற்பட்ட நிலையிற் சென்று இன்பம் நுகர்வதே தவம். பொறி புலன்களும் மனமும் பொருள் முதலியவற்றோடு உறவாடுங்கால் நன்மைகளைப் பற்றித். தீமைகளில் இயல்பாகவே அடங்கி மெய்ம்மையில் ஒடுங்கச் செய்து கொள்வதால் 'தவம்' பலிக்குமே அல்லது முயன்று பொருள்களைத் துறந்து பொறி புலன்களை அடக்கி வருவதால் அது வாராது; வந்தாலும் அது பயன் படாது. கலையுணர்வற்றவனிடம் அகப்பட்ட பொருள் எப்படிக் கசங்கி அழியுமோ அப்படித்தான் மெய்யுணர்வு பெறும் நாட்டமில்லாதவனுடைய தவமும் பயனற்றுப் போகும். "ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயமின்றே மெய்யுணர்வு இல்லாதவர்க்கு" ஐயுணர்வு—தவம். தவமே முடிந்த நிலையல்ல. தவத்தால் உண்டாகும் கூடுவிட்டுக் கூடு பாய்தல் போன்ற 'சித்தி'களைக் கண்டு மயங்கிவிடக் கூடாது மேலும் போக வேண்டும். மெய்யுணர்வு பெறவேண்டும். அதுதான் ஞானம்—தெளிந்த உணர்வு. அதுவே முடிந்த பயன். அதனை அடையும் நெறியே தவம்.

எல்லாம் செயல் கூடும்:

திருவள்ளுவர் இவ்வாறு பொருள், கலை, அன்பு, அடக்கம், அருள் என்று வாழ்க்கை நோக்கங்களைப் படிப்படியே உயர்த்தி வகுக்கிறார். அம்பலவாணர் வடிவமும் இவ்வுண்மைகளையே காட்டிக்கொண்டிருக்கிறது. அம்பலவாணர் ஐந்தொழில் புரிபவர்; அவர் படைக்கிறார்; ஆகவே, அவர் கோயிலிலிருந்து பொருளாதார முயற்சிகளை ஏன் செய்து கொள்ளக் கூடாது? அவர் காக்கிறார்; ஆகவே இங்கிருந்து காக்கத் தக்க கலைப் பண்புகளை ஏன் செய்யக்கூடாது? அவர் அழிக்கிறார், தச்சர் மரத்தையோ கல்லையோ ஏதேனும் ஒரு பொருளையோ சிலையையோ உருவாக்கச் செதுக்குவது போல; ஆகவே இங்கிருந்தே நாட்டை உருவாக்கத்தக்க ஆக்க அழிப்பு வேலைகளைச் சீர்திருத்தச் செயல்களை ஏன் மேற்கொள்ளக் கூடாது? அவர் மறைக்கிறார், தகுதிகளை உண்டாக்க, தக்கவர்களுக்கு மட்டும் விளங்க, தூய்

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
7-ம் ஆண்டுக் கையொப்பம்
(8-10-54 முதல்)

உள்நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0
ஆயுள்—				
கையொப்பம்	ரூ.	100	0	0

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு

கிளை	செய. ஐப்பசி,	தளிர்
7	12-11-54 வெள்ளி.	6

கல்வியின் தரம் உயர

சர்க்காருக்கு உலக நிபுணர்கள் குழு சிபாரிசு

இளைஞர்கள் இத்தொழிலில் புக ராஜ்யந்தோறும் ஆலோசனைக் கமிட்டிகள்

நாட்டில் கல்வியின் தரத்தை அபிவிருத்தி செய்ய செகண்டரி பள்ளி ஆசிரியர்களின் பொருளாதார நிலைமையை உயர்த்த தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று சர்வதேச நிபுணர்கள் கோஷ்டி ஒன்று தன் அறிக்கையில் பலமாகச் சிபாரிசு செய்துள்ளது.

இந்திய சர்க்காரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அவ்வறிக்கையை சர்க்கார் தற்போது பரிசீலித்து வருகின்றனர்.

இந்திய சர்க்காரும், போர்டு ஸ்தாபனமும் கூட்டாக பிரஸ்தாப நிபுணர் கோஷ்டியின் ஆராய்ச்சிக்கு ஏற்பாடு செய்தனர் அதில் 4 இந்திய நிபுணர்களும், இரு அமெரிக்க நிபுணர்களும், ஒரு பிரிட்டிஷ் நிபுணரும், ஒரு ஸ்காண்டிநேவிய நிபுணரும் இடம் பெற்றிருந்தனர்

முதலில் செய்யவேண்டியது

ஆசிரியர்களின் பொருளாதார நிலையை, அதே போன்ற யோக்கியதாம்சங்கள் உள்ளவர்கள் சம பொறுப்புள்ள பிற பொது வேலைகளில் வேலை பார்ப்பவர்களின் பொருளாதார நிலைமைக்கு சமமாக உயர்த்துவது தங்கள் கொள்கை என மத்திய ராஜ்ய சர்க்கார்கள் அறிவிக்க வேண்டுமென்று நிபுணர்கள் சிபாரிசு செய்துள்ளனர்.

ஆனால், ஆசிரியர்களுக்கு நீண்ட காலமாக இழைக்கப்பட்டு வந்துள்ள அநீதியை உடனடியாகப் போக்குவதற்கு சர்க்காரிடம் பணம் இல்லாததால், அவர்களது பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்கத்தை சீக்கிரம் நிறைவேற்ற முடியாதெனினும், மேற்கண்டது போன்ற கொள்கை அறிவிப்பும், அதை நிறைவேற்ற உடனடியாக அவ்வகையில் ஏதாவது முயற்சிகளும் நடைபெறுவது ஆசிரியர்களுக்கு உற்சாகமூட்டப் பெரிதும் உதவும் என்று நிபுணர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

கல்வி முன்னேற......

"இந்தியாவில் ஆசிரியர்களின் சம்பளங்கள் சகிக்க முடியாதபடி மிகக் குறைவாயிருக்கின்றன அவை கணிசமாக உயர்த்தப்பட்டால் ஒழிய கல்வித் துறையில் உருப்படியான முன்னேற்றம் எதுவும் சாத்தியமாகுமென நம்புதற்கில்லை" என்ற முடிவுக்கு நிபுணர்கள் வந்துள்ளனர்.

தற்கால வாழக்கையின் நிர்ப்பந்தம் காரணமாக, கல்வியளிப்பது வரவர, சர்க்கார் பொறுப்பாகிக்கொண்டு வருகையில், ஆசிரியர்களுக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் நியாயமான வாழ்க்கைத் தரத்துக்கு ஏற்பாடு செய்வதும், சர்க்கார் கடமையாகிறதென்றும்" இக்கடமையை நிறவேற்றாமல் இருக்க "குரு பரம்பரை வாதம் ஒரு சால்ஜாப்பாக இருக்கக் கூடாதென்றும் ஏராளமான ஆசிரியர்கள் தேவைப்படுகையில அவர்கள் அனைவரும் தக்க ஊதியமின்றி புனித ஊழியமாகக் கருதுவார்கள் என எதிர்ப்பார்ப்பது யதார்த்த நிலைமைக்கு ஒவ்வாதது என்றும் அறிக்கை கூறுகிறது.

இப்போதுள்ள நிலையில், ஆசிரியர்களுக்கு போதிய அளவுக்கு ரொக்கப்பணம் தருவதற்கான வசதிகள் இல்லையென்பதைக் கருதி அவர்களுக்குத் தனிப்பட்ட சௌகரியங்களைப் பண்ணித் தருமாறு சிபாரிசு செய்திருக்கிறார்கள் ஆசிரியர்கள், பள்ளி நடத்துபவர்கள் கட்டணம் செலுத்தி முறைப்படி அமைந்த சுகாதாரப் பாதுகாப்பு இன்ஷ்யூரன்ஸ் இருக்க வேண்டும். மற்றும் வீட்டு வசதி, இலவச வைத்திய சிகிச்சை ஏற்பாடுகள் போன்ற சௌகரியங்களைச் செய்து தரவேண்டும்.

ரிடையராகும் வயது 60-க்கு மேல்

60 வயது ஆவதற்கு முன் ஆசிரியர்களுக்கு கட்டாய ஓய்வு முறை இருக்கக் கூடாது. கல்வி இலாகா டைரக்டரின்